செ.வெ.எண்: 809/2016　　　　　　　　　　　　　　　　　　　　　　நாள்: 18.11.2016

# பத்திரிகை செய்தி

## மீன்வளத்துறை மூலம் விவசாயிகளுக்கு நன்னீரில் கூட்டின மீன்வளர்ப்பு பயிற்சி

வேளாண்துறையின், வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை (ஆத்மா) (ATMA) நிதியுதவியுடன் மீன்வளத்துறை மூலம் "கூட்டின மீன்வளர்ப்பு" பயிற்சியானது 80 விவசாயிகளுக்கு 17.11.2016 மற்றும் 18.11.2016 ஆகிய இரு நாட்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலக, நாஞ்சில் கூட்டரங்கில் வைத்து நடைபெற்றது.

இதில் வேளாண் இணை இயக்குநர் திரு. இளங்கோ, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வேளாண்மை), திரு.நிஜாமுதின், மீன்துறை துணை இயக்குநர், திரு.லாமக் ஜெயக்குமார், மீன்துறை உதவி இயக்குநர், திரு. ரூபர்ட் ஜோதி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். டாக்டர். சுரேஷ், உதவி பேராசிரியர், மீன்வளப் பல்கலைக்கழகம், நாகப்பட்டிணம் மற்றும் மீன்துறை ஆய்வாளர்கள் விவசாயிகளுக்கு பயிற்சியளித்தனர். மேலும் சொந்த நிலத்தில் குளங்கள் வெட்டி மீன் வளர்க்க முன்வரும் விவசாயிகளுக்கு மீன்வளத்துறை மூலம் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்கள் குறித்து விளக்கி கூறப்பட்டது. மேற்படி பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் தங்கள் நிலங்களில் புதிதாக குளங்கள் வெட்டி மீன் வளர்ப்பு மேற்கொள்வதாக மிகுந்த ஆர்வம் காட்டியுள்ளனர்.

மேற்படி பயிற்சியினை தொடர்ந்து அலங்கார மீன்வளர்ப்பு மற்றும் நன்னீரில் இறால் வளர்ப்பு குறித்த அறிமுக கருத்தரங்கமும் நடைபெற்றது.

இரண்டு நாள் நடைபெற்ற பயிற்சியில் விவசாயிகள் மற்றும் மீனவர்கள் என 80 பேர் கலந்து கொண்டனர். இவர்களுக்கு நிறைவு நாளான இன்று சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

மீன்துறை துணை இயக்குநர்
(மண்டலம்) கன்னியாகுமரி
(இ) நாகர்கோவில்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.